# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2205/5 - 2020 දෙසැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2020.12.08

*2205/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண சபை**

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1அ) பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணை***

*மேல் மாகாணத்தின் ஆளுநர் ரொஷான் குணதிலக ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, வத்தளை மாபோல நகர சபை மற்றும் அதன் தவிசாளராக செயற்பட்ட போது மேற்கூறிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 (1) உப பிரிவின் கீழ் காட்டப்படும் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து 03 மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை முன்வைப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019, திசெம்பர் 03 ஆந் திகதிய 2152/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானாயக்கார அவர்களை உள்ளடக்கிய தனிநபர் விசாரணைக் குழுவின் விசாரணைக் காலத்தினை 2021, மாச்சு மாதம் 03 ஆந் திகதி வரை இங்கு நீடிப்பதாக அறிவிக்கின்றேன்.*

**ரொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் பார் வீஎஸ்வீ யூஎஸ்பி
பீஎச்டி எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்
மேல் மாகாணம்.

*மேல் மாகாண சபை கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள*
*மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்,*
*பத்தரமுல்ல,*
*2020, திசெம்பர் மாதம் 03 ஆம் திகதி.*


1A - G 33314 — 25 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*